**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**சிதம்பரம்**

**அசல் வழக்கு எண்.100-2023**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.04.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B. (Hons). அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.04.2025 | சாட்சி | வா.சா.3 |
| பெயர் | கனகராணி | வயது.. | 52 |
| கணவர் பெயர் | மாயவேல் | கிராமம் | பொட்டவெளி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் நான்காம் வாதி. வா.சா.3 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிராமண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். வாக்கு மூலம் எனது அறிவுறுத்தலின் பேரில் தயார் செய்யப்பட்டது. வாக்குமூலத்தை படித்து பார்த்து சரியென்று அறிந்து கையொப்பமிட்டேன்.

இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் என் பெரியப்பா ஜெகநாதன் மற்றும் பெரியம்மா அமிர்தவள்ளி அவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் நாங்கள் தான் வாரிசு என்ற அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்தோம். என் தாயார் பெயர் அபூர்வலட்சுமி, என் தாயாரின் பெற்றோர் பெயர் ஞாபகமில்லை. என் தாயாரின் பெற்றோர் அவர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண் வாரிசு மற்றும் 4 பெண் வாரிசுகள். அதில் எத்தனை பெயர் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உயிருடன் இருக்கிறார்கள். இறந்ததாக சொல்லப்படும் நபர்களுக்கு வாரிசுகள் உள்ளனரா என்றால் இறந்த கோதண்டராமசாமி மற்றும் கிருஷ்ணசாமிக்கு வாரிசு உண்டு.

2. இறந்த பெண் வாரிசுகள் அமிர்தவள்ளி, தமயந்தி மற்றும் அபூர்வலட்சுமி ஆவார். இறந்த அமிர்தவள்ளிக்கு வாரிசு இல்லை. இறந்த ஆண் வாரிசு கோதண்டராமசாமி, கிருஷ்ணசாமி மற்றும் பெண் வாரிசு தமயந்தி அவர்களின் வாரிசுகளை ஏன் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் என் பெரியப்பா பெரியம்மா என்பதால் நாங்கள் தான் பராமரித்து வந்தோம் எனவே மற்ற நபர்களை சேர்க்கவில்லை. என்னை எந்த

ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் குறிஞ்சிப்பாடி அருகில் உள்ள பொட்டவெளி. என் பெரியப்பா பெரியம்மா கடைசி காலத்தில் எந்த ஊரில் இருந்தார்கள் என்றால் புவனகிரி அருகில் உள்ள எல்லைக்குடியில் இருந்தார்கள். கடைசி காலத்தில் அவர்களை யார் பார்த்துக்கொண்டார்கள் என்றால் என் அண்ணன்கள் வாதி 1 முதல் 3 அவர்களை பார்த்துக்கொண்டனர். அமிர்தவள்ளி, ஜெகநாதன் இறப்பிற்கு என் தாயாருடன் பிறந்த சகோதர சகோதரிகளின் வாரிசுகள் வந்தார்களாக என்றால் வந்தார்கள். பெரியப்பா பெரியம்மாவான அமிர்தவள்ளி, ஜெகநாதன் உங்களை தத்து எடுத்தற்காக எதாவது பதிவு செய்துள்ளார்களா என்றால் பதிவு எதுவும் கிடையாது அவர்கள் எங்களை பாசமாக வளர்த்தார்கள். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் வழக்கறிஞரின் அறிவுறுத்தலின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வாதி வேண்டுகோளுக்கிணங்க மேலும் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram